DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 23 /2024 |
| Deposition of witness | : | P. W – 6 |
| Name | : | பாபுதாஸ் |
| Father's /Husband Name | : | சோமசுந்தரம் |
| Village | : | மேலநத்தம் |
| Taluk | : | மன்னார்குடி |
| Age | : | 60 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 10th day September, 2025.
A1, A2, A4 present. A3 absent petition U/sec. 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 03.01.2022–ம் தேதி பேரளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது உத்திராபதி மகன் கார்த்திகேயன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதற்கு மனு எண்.02/2022 என கொடுத்து விசாரித்து 05.01.2022–ம் தேதி காலை 08.00 மணியளவில் பேரளம் காவல் நிலைய குற்ற 12/2022, சட்டப்பிரிவுகள் 294(b), 352, 448, 506(2) இதச–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு நான் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 05.01.2022–ம் தேதி காலை 09.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஐயப்பன், ராஜவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தேன். அவைகள் முறையே **அ.சா.ஆ.3** மற்றும் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனிதனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் எனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை 05.01.2022–ம் தேதி காலை 11.00 மணிக்கு பூந்தோட்டம் கடைத்தெருவில் இருந்த எதிரிகள் நால்வரையும் அடையாளம் கண்டு பின்பு காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான்கு நாட்கள் காலதாமதமாக இவ்வழக்கில் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரால் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படாமல் மனு பதிவு செய்ததற்கு சிறப்பு காரணம் உண்டா என்றால் இல்லை.

நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும் புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.09.15 17:34:54 +0530